

We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## ஜனவரி - 2020

*We Are Here..!! To Guide You..!!*



# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (Current Affairs)

## ஜனவரி - 15.01.2020

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- இந்திய நிகழ்வுகள்
- உலகநிகழ்வுகள்
- விளையாட்டு செய்திகள்










# இந்திய நிகழ்வுகள்

- **ஈரான் வெளியுறவு அமைச்சர் ஜாவேத் ஸரீ∴ப்,** 3 நாள் பயணமாக தில்லிக்கு ஜனவரி 14, 2020அன்று வந்து சேர்ந்தார்.
    - பிரதமர் நரேந்திர மோடியை ஜனவரி 15, 2020 அன்று சந்தித்த அவர், **'ரெய்சினா பேச்சு வார்த்தை' மாநாட்டிலும்** பங்கேற்று உரை நிகழ்த்தவுள்ளார்.
    - **செய்திதுளிகள் :**
        - ஸரீ∴பை, இந்தியாவின் வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய் சங்கர் சந்தித்துப் பேசியுள்ளார்.
        - மும்பை செல்லும் ஸரீ∴ப், அங்கு தொழிலதிபர்களுடன் கலந்துரையாடுகிறார். ஜனவரி 17, 2020 தாய்நாடு திரும்புகிறார் என்று இந்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- **நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் ஜனவரி 31-ஆம் தேதி** தொடங்குகிறது. 2020-2021-ம் ஆண்டு நிதிஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை பிப்ரவரி 1-ம் தேதி மத்திய நிதிஅமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்ய உள்ளார்.
    - ஜனவரி 31-ல் தொடங்கும் நாடாளுமன்ற முதற்கட்ட கூட்டத் தொடர் பிப்ரவரி 11-ம் தேதி வரை நடைபெறும் என கூறப்படுகிறது.
    - **செய்திதுளிகள் :**

- ஜனவரி 31-ல் நடைபெறும் இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் உரையாற்றுகிறார்.

## உலக நிகழ்வுகள்

- **50 ஆண்டுகளுக்கு முன்னர் பூமியில் விழுந்த விண்கல்லுக்குள் படிந்துள்ள நட்சத்திரத் துகள், 700 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் உருவானதாக அமெரிக்க விஞ்ஞானிகள் நவீன கருவிகள் மூலம்** தற்போது **கண்டறிந்துள்ளனர்.**
    - நமது பால்வெளிமண்டலம் எவ்வாறு உருவானது என்பதை அந்தநட்சத்திரத் துகள் மூலம் அறிந்து கொள்ள முடியும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.
    - **செய்திதுளிகள் :**
        - சூரியக் குடும்பம் உருவாவதற்கு முன்னரே தோன்றிய அந்த நட்சத்திரத் துகள் தான் தற்போது பூமியில் உள்ள மிகப் பழைய திடப் பொருள் என்று இதற்கான ஆய்வை மேற்கொண்ட சிகாகோபல் கலைக்கழ கவிஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

- **புத்தர் சிற்பக்கலைப் பற்றிய கண்காட்சி ஜனவரி 14ஆம் நாள் சீனாவின் செங்து நகரில் துவங்கியது.**
    - சீனாவின் 12 பண்பாட்டு நிறுவனங்கள் மற்றும் அருங்காட்சியகங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேலான தொல்

பொருட்கள் இதில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

- **செய்திதுளிகள் :**
  - சீனப் பல்வகைப் பண்பாடுகள், சீனத் தேசிய இனங்களின் ஒன்றிணைப்பு, பண்டைகாலத்தில் சீனாவுக்கும் இந்தியாவுக்குமிடையிலான பண்பாடு, மதம் மற்றும் கலையின் பரிமாற்றங்கள் ஆகியவற்றை இக்கண்காட்சி வெளிப்படுத்தியுள்ளது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **கேலோ இந்தியாயூத் விளையாட்டுப் போட்டிகளின்** ஓர பகுதியாக செவ்வாய்க்கிழமை தடகளத்தில் **தமிழகத்தின் காருண்யா, ஹேமமாலினி ஆகியோர் தங்கம்** வென்றனர்.
  - 21 வயதுக்குட்பட்ட மகளிர் தடகளம் வட்டு எறிதலில் தமிழகத்தின் எம்.காருண்யா 46.18மீ தூரம் எறிந்து தங்கம் வென்றார். ஈட்டி எறிதலில் தமிழக வீராங்கனை ஹேமமாலினி 46.54மீ தூரம் எறிந்து (புதியசாதனையுடன்) தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.
  - **செய்திதுளிகள் :**
    - 100மீ. ஓட்டத்தில் கேரளத்தின் அன்சிசோஜன் 12.21 வினாடிகளில் கடந்துதங்கம் வென்றார்.
    - 21 வயதுக்குட்பட்ட மகளிர் தடகளம் வட்டு எறிதலில் கிரிமா (ஹரியாணா), பரம்ஜோத் கவுர் (பஞ்சாப்) வெள்ளி, வெண்கலம் வென்றனர்.

We Shine Academy™

# திருக்குறள்

**குறள் எண் : 78**

குறள் பால் :அறத்துப்பால்

குறள் இயல் : இல்லறவியல்

குறள் அதிகாரம் :அன்புடைமை

**அன்பகத் தில்லாஉயிர்வாழ்க்கைவன்பாற்கண்**

**வற்றல் மரந்தளிர்த் தற்று.**

**விளக்கம் :** மனத்தில் அன்பில்லாதமக்கள் இல்லறத்தில் நன்குவாழ்தல் என்பதுவழியபாலைநிலத்தில் உலர்ந்தமரம் தளிர்த்தல் போன்றதாகும்.

We Shine Academy TM